2. தகவல் கோரல்.

திருச்சி, கோவை சிறைச்சாலைகளில் அளிக்கப்படும் உணவு.

*டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய முன் அனுமதியோடு, இங்கே ஒரு முக்கியமான பிரச்சினையை இந்த அரசின் கவனத்திற்கு, குறிப்பாகவும், சிறப்பாகவும், சிறைச்சாலைத் துறை நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ள மாண்புமிகு அமைச்சர் திரு. பொன்னையன் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வர நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இது ஒரு மனிதாபிமான பிரச்சினை. தமிழ் நாட்டில் அண்மையில் நடைபெற்ற அரசாணை எரிப்புப் போராட்டத்தில், பல சிறைச்சாலைகளில் திராவிட முன்னேற்றக் கழகத்தொண்டர்கள் பல்லாயிரக்கணக்கில் அடைக்கப்பட்டிருக்கின்றார்கள். இரண்டொரு சிறைச்சாலைகளில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வேலூரைப் பொறுத்தவரையில் ஓரளவு அந்தக் குறைபாடு நீக்கப்பட்டிருக்கின்றது. அப்படி நீக்கப்பட்டதற்கு நான் அரசிற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிற அதே நேரத்தில், திருச்சி, கோவை போன்ற இடங்களில் இன்னும் அந்தக் குறைபாடுகள் நீக்கப்படாமல் இருக்கின்றன. நேற்று திருச்சி சிறைச்சாலையிலுள்ள கைதிகள் உண்ணாமலேயே இருந்திருக்கிறார்கள் ;

[முற்பகல் 10—20]

அங்கே அவர்கள் நடத்தப்படுகின்ற முறையும் கொடூரமானதாகவும் ஈவு இரக்கமற்றதாகவும் இருக்கிறது என்று எனக்குச் செய்திகள் வந்தவண்ணம் இருக்கின்றன. ஒரு வேளை அங்குள்ள அதிகாரிகளுக்குத் தகுந்த வசதி வாய்ப்புகளை கொடுக்காத காரணத்தாலோ அல்லது செய்துகொடுக்க விரும்புகின்ற வசதி வாய்ப்புகள் துரிதமாகப் போய்ச் சேராத காரணத்தாலோ அந்த நிலை ஏற்பட்டிருக்கக் கூடும் என்று கருதுகிறேன். அன்றைக்கு முதலமைச்சர் அவர்களும் உறுதியளித்தார்கள். உடனடியாகக் கவனிக்கப்படும் என்று. அந்தத் துறை அமைச்சர் அவர்களும் என்னிடத்திலும் நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களிடத்திலும் இது குறித்துப் பேசி உடன்டியாக ஆவன செய்வதாகச் சொன்னார்கள். இருந்தும்கூட அங்கு எதுவும் நடைபெறவில்லை. தங்களுடைய அனுமதியோடு இங்கே இந்தப் பொட்டலத்தைக் காட்ட விரும்புகிறேன். தங்களிடத்திலே காட்டினேன் அனுமதியைப் பெற்று. (வேகாத சோளப் பொட்டலத்தைக் காட்டினார்கள்) இது அங்குள்ள கைதிகளுக்குத் தரப்படுகிற உப்புமா. அளவு அல்ல இது ; இது உப்புமா

வுக்குத் தரப்படுகிற சோளத்தின் நொய்யும் அல்ல, சமைக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட வழங்கப்படுகிற உப்புமா, நான் எடையைச் சொல்லவில்லை. தரத்தைச் சொல்லுகிறேன். அமைச்சர் அவர்களும் கருணை கூர்ந்து இதைப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மாத்திரம் உரிய பிரச்சினையல்ல, இந்த மன்றத்திலே இருக்கிற எல்லா எதிர்க்கட்சிகள், ஆளுங்கட்சியிலே உள்ள மனிதாபிமானம் உள்ள அத்தனை பேருக்கும் உரிய பிரச்சினை என்ற காரணத்தினால் உடனடியாக ஆவன செய்வதற்கு அரசு முயற்சிகளை எடுத்துக்கொள்ளுமா என்று கேட்டு இந்தப் பிரச்சினையை நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் நடந்த போராட்டத்தையொட்டி வேலூர், திருச்சி, கோவை போன்ற சிறைகளில் இருக்கின்ற கைதிகளுக்கு குறிப்பாக குடிதண்ணீர் பற்றவில்லை என்ற பிரச்சினையை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்களும் பேராசிரியர் அவர்களும் என்னிடம் நேரடியாகக் கூடச் சொன்னார்கள். உடனடியாக திடீரென சற்று 1000-க்கு மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு சிறைக்கு எடுத்துச் செல்லப்பட்டதால் அதிகாரிகளுக்கு நிர்வாகச் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது, அந்த நிலைமையில் பிரைவேட் லாரிகளைக் கூட ஏற்பாடு செய்து தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் சொன்னதுபோல் வேலூரில் அந்தக் குறை நீக்கப்பட்டது. பேராசிரியர் அவர்கள் நேற்றுப் பிற்பகலில் திருச்சி சிறையிலே இருக்கிற பிரச்சினை பற்றிச் சொன்னார்கள், மாண்புமிகு உறுப்பினர் அன்பிலும் அதைப் பற்றிச் சொன்னார்கள். உடனடியாக உத்திரவுபோடப்பட்டு அங்கே குடிநீர்ப் பிரச்சினை நீக்கப்பட்டு விட்டது. இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உப்புமா பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்ததற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தற்போது சிறையிலே உணவினுடைய தரத்தை மாற்ற வேண்டுமென்ற அடிப்படையிலே சோள உப்புமாவுக்குப் பதிலாக அரிசி மாவை, மில் அரிசியினால் ஆன மாவை தரவேண்டுமென்றுகூட நடவடிக்கை எடுத்து வருகிறோம். இந்தப் பிரச்சினை ஒரு வேளை அதிகப்படியான கைதிகள் வந்த காரணத்தால் நிர்வாகப் பிரச்சினை ஏற்பட்டதோ எது எப்படியிருந்தாலும், சிறை அதிகாரிகளோடு தொடர்புகொண்டு கைதிகளுக்கு தகுந்த வசதிகளை செய்வதற்கும் உணவு போன்றவற்றில் இருக்கிற குறைபாடுகளையும் போக்குவதற்கும் அரசு ஆவன செய்யும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY